සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**60 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2014**

| | | |
|---|---|---|
| ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II<br>**வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II**<br>Business and Accounting Studies I, II | | පැය තුනයි<br>**மூன்று மணித்தியாலம்**<br>*Three hours* |

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

**கவனிக்க :**

(i) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

- பின்வரும் சம்பவத்தை அவதானித்து **1** தொடக்கம் **3** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"நிர்மலா என்பவள் சுகாதாரமான முறையில் இடியப்பம், பிட்டு, ரொட்டி, கடலை, பாசிப்பயறு, அப்பம், சோறு ஆகியவற்றை காலை உணவுக்காக தானே தயாரித்து விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை நடத்தி வருகின்றாள்."

1. இவ்வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனிதத் தேவை எது ?
(1) உணவு (2) உடைகள் (3) இருப்பிடம் (4) சுகாதாரம்

2. இவ்வணிகத்தினால் வழங்கப்படும் இடியப்பம், பிட்டு, ரொட்டி, கடலை, பாசிப்பயறு, அப்பம், சோறு ஆகியவற்றை எவ்வாறு அழைக்க முடியும் ?
(1) தேவைகள் என (2) உற்பத்திப்பொருள்கள் என
(3) உள்ளீடுகள் என (4) மூலதனம் என

3. பின்வருவன மேலுள்ள சம்பவம் தொடர்பான சில கூற்றுகள் ஆகும்.
A - இவ்வணிகமானது பல்வேறுபட்ட மனித விருப்பங்களை உருவாக்கியுள்ளது.
B - நிர்மலா நேர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளாள்.
C - இது ஒரு தனியார்துறை வணிக நிறுவனமாகும்.
D - இவ்வணிகமானது முதனிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது.
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் சரியான கூற்றுகள்,
(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) B யும் D யும்

4. ஊழியர்களின் திறன்களை அதிகரிக்கச் செய்வதற்காக ஒரு வணிகத்தினால் நடத்தப்பட்ட செயலமர்வு ஒன்று சகல ஊழியர்களினாலும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்படின், அது அவ்வணிகத்திற்கு
(1) ஒரு பலம் ஆகும். (2) ஒரு வாய்ப்பு ஆகும். (3) ஒரு பலவீனம் ஆகும். (4) ஓர் அச்சுறுத்தல் ஆகும்.

5. பின்வரும் X நிரலில் சில வணிக நிறுவனங்களின் வகைகளும் Y நிரலில் அவற்றுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. தனியுடைமை | A - குணரத்தினமும் சகோதரர்களும் |
| 2. பங்குடைமை | B - அல்பா PLC |
| 3. தனியார் வரையறுத்த கம்பனி | C - குமரன் ஸ்ரோர்ஸ் |
| 4. பொது வரையறுத்த கம்பனி | D - முரசு (தனியார்) வரையறுத்த கம்பனி |

X நிரலில் உள்ள வணிக நிறுவனங்களின் வகைகளுக்கு ஏற்றவாறு பொருந்தத்தக்கதாக Y நிரலில் உள்ள உதாரணங்களின் சரியான ஒழுங்குமுறையை எடுத்துக்காட்டும் விடை,
(1) A, B, C, D ஆகும். (2) A, C, D, B ஆகும். (3) C, A, B, D ஆகும். (4) C, A, D, B ஆகும்.

6. மத்திய வங்கி அறிக்கையின்படி, 2013ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு உயர்ந்தளவான பங்களிப்புப் பெறப்பட்டது,
(1) விவசாய உற்பத்தித்துறை மூலம் ஆகும். (2) கைத்தொழில் உற்பத்தித்துறை மூலம் ஆகும்.
(3) சேவைகள் உற்பத்தித்துறை மூலம் ஆகும். (4) முதனிலை உற்பத்தித்துறை மூலம் ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

7. வணிகம் ஒன்றைப் பதிவுசெய்வது தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இலங்கையில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சகல வணிக நிறுவனங்களும் பதிவுசெய்யப்படுவது கட்டாயமானதாகும்.
(2) ஒரு வரையறுத்த கம்பனியானது, கூட்டிணைத்தலின் மூலம் ஒரு பட்டியற்படுத்தப்பட்ட கம்பனியாக முடியும்.
(3) பதிவுசெய்வதன் மூலம் எல்லா வணிகமும் சட்ட ஆளுமையைப் பெற்றுக்கொள்ள முடியும்.
(4) ஒரு வரையறுத்த கம்பனியானது, கூட்டிணைத்தலின் மூலம் சட்ட ஆளுமையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **8** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மோகன் என்பவரால் தொடங்க எண்ணியுள்ள பென்சில் உற்பத்தி வணிகம் தொடர்பில் 2015 ஜனவரி மாதத்திற்காக மதிப்பிடப்பட்ட தகவல்கள் சில கீழே தரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| A | - எதிர்பார்க்கப்படும் விற்பனைகள் - பென்சில்கள் | 500 |
| B | - ஒரு பென்சிலின் உற்பத்திக் கிரயம் | ரூ. 10 |
| C | - ஒரு பென்சிலின் விற்பனை விலை | ரூ. 15 |
| D | - எதிர்பார்க்கப்படும் ஆரம்ப மூலதனம் | ரூ. 25 000 |
| E | - எதிர்பார்க்கப்படும் வங்கிக் கடன்கள் | ரூ. 10 000 |

8. மேலே தரப்பட்ட தகவல்களில் இருந்து இவ்வணிகத்தின் சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள்,
(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) B யும் D யும்

9. இவ்வணிகத்திற்கான மதிப்பிடப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயம்
(1) ரூ. 2 500 (2) ரூ. 5 000 (3) ரூ. 7 500 (4) ரூ. 12 500

10. மோகனால் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் வங்கிக்கடனானது வணிகத் திட்டத்தின் எப்பகுதியில் உள்ளடக்கப்படும் ?
(1) சந்தைப்படுத்தல் திட்டத்தில் ஆகும். (2) செயற்பாட்டுத் திட்டத்தில் ஆகும்.
(3) நிதித் திட்டத்தில் ஆகும். (4) மனித வளத் திட்டத்தில் ஆகும்.

11. காசோலை ஒன்றுக்குக் குறுக்குக் கோடிடுவது தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) காசோலைக்குக் குறுக்காக இரண்டு சமாந்தரமான கோடுகளை வரைவது சிறப்புக் கோடிடல் ஆகும்.
(2) காசோலையை வரைபவரால் மட்டுமே காசோலையில் குறுக்குக் கோடிடலை மேற்கொள்ள முடியும்.
(3) குறுக்குக் கோடிட்ட காசோலையை கொடுப்பவரிலும் பார்க்க பெற்றுக் கொள்பவர் கூடுதலான உரிமையை உடையவர் ஆவார்.
(4) குறுக்குக் கோடிட்ட ஒரு காசோலைக்கு வங்கிக் கரும பீடத்தில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது.

12. சில்லறை வணிகம் ஒன்றை நடத்திவரும் தனஞ்சயன், நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றார். இதற்காக அவர் தெரிவுசெய்ய வேண்டிய வங்கி
(1) அரச அடைமான முதலீட்டு வங்கி (2) இலங்கை வங்கி
(3) தேசிய சேமிப்பு வங்கி (4) தேசிய அபிவிருத்தி வங்கி

13. வங்கி ஒன்றினால் வாடிக்கையாளர் ஒருவருக்கு கடன் அடிப்படையில் வழங்கப்படும் இலத்திரனியல் அட்டையானது,
(1) கடன் அட்டை (Credit Card) ஆகும்.
(2) வரவு அட்டை (Debit Card) ஆகும்.
(3) தன்னியக்க ரெல்லர் இயந்திர அட்டை (ATM Card) ஆகும்.
(4) முற்செலுத்திய அட்டை (Prepaid Card) ஆகும்.

● பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி **14**ஆம் **15**ஆம் வினாக்களுக்கு விடை தருக.

குமார் என்பவர் தனது வியாபார நிறுவனத்திற்காக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து தீக்காப்புறுதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொண்டார். காலப்போக்கில் வரையறுத்த லிற்ரோ வாயு கம்பனியின் ஒரு முகவராக அதே வியாபார நிலையத்தில் வாயு சிலிண்டர்களையும் விநியோகிக்கத் தொடங்கினார். ஆனால், இது தொடர்பில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்குத் தெரிவிக்கப்படவில்லை. வணிக நிறுவனத்தில் வாயுக் கசிவின் காரணமாக ஏற்பட்ட தீ அனர்த்தத்திற்காக நட்டஈட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது அது காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் மறுக்கப்பட்டது.

14. இச்சம்பவத்தில் காப்புறுதி அளித்தோரையும் காப்புறுதி செய்தோனையும் முறையே உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) குமார், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்
(2) இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், குமார்
(3) வரையறுத்த லிற்ரோ வாயு கம்பனி, குமார்
(4) இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், வரையறுத்த லிற்ரோ வாயு கம்பனி

[பக். 3 ஐப் பார்க்க

15. காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் நட்டஈட்டுக் கோரிக்கை மறுக்கப்பட்டதற்குக் காரணமான காப்புறுதித் தத்துவம் எது ?
(1) காப்புறுதி செய்தகு நலன் (2) மிக்குயர் நம்பிக்கை
(3) இழப்பீடு (4) பதிலாள் வைப்பு

16. இலங்கையின் போக்குவரத்துத் துறையில் நிகழ்ந்த சில சம்பவங்கள் X நிரலிலும் போக்குவரத்து மூலகங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. போக்குவரத்திற்காக இ.போ.ச. (S.L.T.B.) இனால் 100 ஆடம்பர பேருந்துகள் ஈடுபடுத்தப்பட்டமை | A - பாதை |
| 2. டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டமை | B - ஊடகம் |
| 3. மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டமை | C - வலு (சக்தி) |
| 4. கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்டமை | D - தரிப்பிடம் (முனையம்) |

மேலே X நிரலில் உள்ள சம்பவங்களுக்குப் பொருந்தத்தக்கதாக Y நிரலில் உள்ள போக்குவரத்து மூலகங்களை சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடை,
(1) A, B, C, D (2) B, C, A, D (3) B, C, D, A (4) C, B, D, A

17. வணிகமொன்று புதிய உற்பத்திப்பொருள் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான விளம்பரமொன்றை இணையத்தில் பிரசுரித்திருந்தது. இது ஒரு
(1) உள்வாரியான, வாய்மொழி மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
(2) உள்வாரியான, எழுத்து மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
(3) வெளிவாரியான, வாய்மொழி மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.
(4) வெளிவாரியான, எழுத்து மூலமான, இலத்திரனியல் தொடர்பாடலாகும்.

18. கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல் பலகையானது ஒரு பாடசாலைக்கு முன்னாலுள்ள பிரதான பாதையில் நிறுவப்பட்டுள்ளது. இது உள்ளடக்கியிருக்கும் தொடர்பாடல்,



(1) எழுத்து மூலமானது.
(2) வாய்மொழி மூலமானது.
(3) இலத்திரனியல் மூலமானது.
(4) குறியீடுகள் மற்றும் அடையாளங்கள் மூலமானது.

19. வரையறுத்த கம்பனி ஒன்றின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதனால் முதலீட்டாளர் ஒருவருக்கு பெற்றுக்கொள்ள **முடியாத** திரும்பல்
(1) வட்டி வருமானங்கள் ஆகும். (2) மூலதன ஆதாயங்கள் ஆகும்.
(3) பங்கிலாபங்கள் ஆகும். (4) வாக்களிக்கும் உரிமை ஆகும்.

20. தமது புதிய தொழிற்சாலையைக் கட்டியெழுப்புவதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக உமா அன்ட் பாமா புடைவை நிறுவனமானது பயன்படுத்தக்கூடிய நிதி மூலம் எது ?
(1) சாதாரண பங்குகளை வழங்குதல் (2) முன்னுரிமைப் பங்குகளை வழங்குதல்
(3) தொகுதிக் கடன்களை வழங்குதல் (4) வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்ளுதல்

21. இரண்டு பேரேட்டுக் கணக்குகள் X நிரலிலும் இக்கணக்குகளில் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்கான இரட்டைப் பதிவுத் தத்துவம் Y நிரலிலும் கீழே தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. வாடகைக் கணக்கு | A - பொறுப்புகள் - அதிகரித்தல் செலவு, குறைதல் வரவு |
| 2. கடன்கொடுத்தோர் கணக்கு | B - பொறுப்புகள் - அதிகரித்தல் வரவு, குறைதல் செலவு |
| | C - செலவீனங்கள் - அதிகரித்தல் செலவு, குறைதல் வரவு |
| | D - செலவீனங்கள் - அதிகரித்தல் வரவு, குறைதல் செலவு |

X நிரலிலுள்ள பேரேட்டுக் கணக்குகளுக்குப் பொருந்தத்தக்கதாக Y நிரலிலுள்ள பொருத்தமான இரட்டைப் பதிவுத் தத்துவங்களைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடை
(1) C, A ஆகும். (2) C, B ஆகும். (3) D, A ஆகும். (4) D, B ஆகும்.

[பக். 4 ஐப் பார்க்க

31165

22. கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஒரு கொடுக்கல்வாங்கலின் தாக்கம் கீழே தரப்படுகின்றது.

| சொத்துகள் | = | உரிமையாளர் உரிமையாண்மை + பொறுப்புகள் |
|---|---|---|
| + 25 000 | = | – + 25 000 |

மேலுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் பதிவு செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்
(1) ரூ. 25 000 பெறுமதியான சரக்குகள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டமை ஆகும்.
(2) கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு ரூ. 25 000 ஆகும்.
(3) காசாக மீளச் செலுத்திய வங்கிக்கடன் ரூ. 25 000 ஆகும்.
(4) உடைமையாளரால் காசாக முதலீடு செய்யப்பட்ட மூலதனம் ரூ. 25 000 ஆகும்.

23. வியாபார நிறுவனமொன்றில் நிகழ்ந்த கொடுக்கல்வாங்கல் ஒன்று கீழே தரப்படுகின்றது.
- நிமலன் என்பவருக்கு ரூ. 10 000 பெறுமதியான சரக்குகள் கடனுக்கு விற்கப்பட்டது.

இக்கொடுக்கல்வாங்கலைப் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு
(1) காசுக் கணக்கு வரவு ரூ. 10 000
விற்பனைகள் கணக்கு செலவு ரூ. 10 000
(2) விற்பனைகள் கணக்கு வரவு ரூ. 10 000
நிமலன் கணக்கு செலவு ரூ. 10 000
(3) நிமலன் கணக்கு வரவு ரூ. 10 000
விற்பனைகள் கணக்கு செலவு ரூ. 10 000
(4) காசுக் கணக்கு வரவு ரூ. 10 000
நிமலன் கணக்கு செலவு ரூ. 10 000

24. வணிகமொன்றின் காசேட்டு வங்கி மீதி 31.01.2014 இல் ரூ. 19 200 ஐக் காட்டியபோதும், அத்தினத்தில் வங்கிக் கூற்றில் அம்மீதி ரூ. 20 000 ஆகக் காணப்பட்டது. இம்மீதிகளின் வித்தியாசத்துக்குக் காரணமான கொடுக்கல்வாங்கல்,
(1) வைப்புச் செய்யப்பட்டபோதும் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ. 800 ஆகும்.
(2) காசேட்டில் பதிவுசெய்யப்படாத வங்கிக் கட்டணங்கள் ரூ. 800 ஆகும்.
(3) வணிகத்தின் வங்கிக் கூற்றில் வங்கியால் பிழையாக வரவு வைக்கப்பட்ட தொகை ரூ. 800 ஆகும்.
(4) வணிகத்தினால் காசேட்டின் வங்கி நிரலில் பிழையாக செலவு வைக்கப்பட்ட தொகை ரூ. 800 ஆகும்.

25. காசேட்டின் வங்கி நிரலைத் திருத்துவதில் பயன்படுத்தப்படும் மூல ஆவணம் எது ?
(1) காசோலை அடியிதழ்கள் (2) வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று
(3) வங்கிக் கூற்று (4) காசோலை வைப்புத் துண்டு

26. வணிகமொன்றில் நிகழ்ந்த ஒரு கொடுக்கல்வாங்கல் கீழே தரப்படுகின்றது.
- கபிலன் என்பவருக்குத் திருப்பி அனுப்பிய சரக்குகள் ரூ. 5 000 ஆகும்.

மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கலைப் பதிவுசெய்வதற்காக பயன்படுத்தப்படும் மூல ஆவணத்தையும், முதன்மைப் பதிவு ஏட்டையும் முறையே எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) வரவுத்தாள், விற்பனைத் திரும்பல் நாளேடு (2) வரவுத்தாள், கொள்வனவுத் திரும்பல் நாளேடு
(3) செலவுத்தாள், விற்பனைத் திரும்பல் நாளேடு (4) செலவுத்தாள், கொள்வனவுத் திரும்பல் நாளேடு

27. பொது நாட்குறிப்பு தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - பொது நாட்குறிப்பு என்பது ஒரு முதன்மைப் பதிவு ஏடு ஆகும்.
B - பொது நாட்குறிப்பில் இடம்பெறுவது ஆரம்பப் பதிவுகள் மட்டுமே ஆகும்.
C - பொது நாட்குறிப்பில் கொடுக்கல்வாங்கலைப் பதிவுசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணம், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு (கச்சாத்து) ஆகும்.
D - கணக்கீட்டில் ஏற்படும் பிழைகளின் திருத்தத்திற்கான பதிவுகள் பொது நாட்குறிப்பில் பதிவுசெய்யப்படும்.

மேலே தரப்பட்டவற்றிலிருந்து சரியான கூற்றுகளைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) A, C மாத்திரம் (2) A, D மாத்திரம் (3) A, C, D மாத்திரம் (4) B, C, D மாத்திரம்

28. அமிலன் வணிகத்தினது சில்லறைக் காசேட்டு வசக்கட்டு ரூ. 3 000 ஆகும். 30.09.2014 இல் சில்லறைக் காசாளரிடமிருந்த மீதி ரூ. 150 ஆகும். அதே தினத்தில் சில்லறைக் காசேடானது மீள நிரப்பப்பட்டது. சில்லறைக் காசேட்டு வசக்கட்டை மீள நிரப்புவது தொடர்பான சரியான இரட்டைப் பதிவு எது ?
(1) சில்லறைக் காசேடு வரவு ரூ. 3 000
காசேடு செலவு ரூ. 3 000
(2) சில்லறைக் காசேடு வரவு ரூ. 2 850
காசேடு செலவு ரூ. 2 850
(3) காசேடு வரவு ரூ. 3 000
சில்லறைக் காசேடு செலவு ரூ. 3 000
(4) காசேடு வரவு ரூ. 2 850
சில்லறைக் காசேடு செலவு ரூ. 2 850

[பக். 5 ஐப் பார்க்க

29. வியாபார நிறுவனமொன்றில் நிகழ்ந்த ஒரு கொடுக்கல்வாங்கல் கீழே தரப்படுகின்றது.

- காஞ்சனா என்ற கடன்கொடுத்தோருக்குச் செலுத்த வேண்டிய ரூ. 5 000 இற்காக ரூ. 4 500 காசோலை வழங்கி கணக்குத் தீர்க்கப்பட்டது.

இக்கொடுக்கல்வாங்கல் காரணமாக
(1) இவ்வணிகத்தின் அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ. 500 ஆல் அதிகரிக்கும்.
(2) இவ்வணிகத்தின் கடன்கொடுத்தோர் மீதி ரூ. 4 500 ஆல் குறைவடையும்.
(3) இவ்வணிகத்தின் வங்கி மீதி ரூ. 4 500 ஆல் குறைவடையும்.
(4) இவ்வணிகத்தின் காசு மீதி ரூ. 500 ஆல் அதிகரிக்கும்.

30. வணிகமொன்றின் காசேட்டு வங்கி நிரலின் செலவு மீதியானது, வணிகத்துக்கு
(1) ஒரு சொத்து ஆகும்.
(2) ஒரு பொறுப்பு ஆகும்.
(3) ஒரு வருமானம் ஆகும்.
(4) ஒரு செலவீனம் ஆகும்.

31. மோட்டார்வாகனத் திருத்தச் செலவுகள் ரூ. 100 000 மோட்டார்வாகனக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. இது ஒரு
(1) முற்றாக விடுபட்ட வழுவாகும்.
(2) செய்பாட்டு (கணக்கு மாறிப் பதிந்த) வழுவாகும்.
(3) கோட்பாட்டு வழுவாகும்.
(4) இரட்டித்தல் வழுவாகும்

32. பின்வருவன கணக்கீட்டில் நிகழந்த சில வழுக்கள் ஆகும்.
A - கொள்வனவுத் திருப்பம் ரூ. 1 200, கொள்வனவுத் திரும்பல் நாளேட்டில் ரூ. 2 100 எனப் பதியப்பட்டது.
B - விற்பனைத் திருப்பம் ரூ. 3 000, விற்பனைத் திரும்பல் கணக்கிலும் கடன்பட்டோர் கணக்கிலும் வரவு வைக்கப்பட்டது.
C - பெற்றுக்கொண்ட முதலீட்டு வருமானம் ரூ. 1 500, காசேட்டில் மட்டும் பதிவுசெய்யப்பட்டது.
மேலே தரப்பட்ட வழுக்களுள், பரீட்சை மீதியின் வரவு மற்றும் செலவு நிரல்களின் கூட்டுத்தொகையில் வித்தியாசத்தை ஏற்படுத்தும் வழுக்கள்
(1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) A, B, C ஆகிய எல்லாம்.

33. சில்லறை வியாபார நிறுவனம் ஒன்றிற்கு வாங்கப்பட்ட ரூ. 800 000 பெறுமதியான ஒரு லொறி ஒரு ---------- ① ஆகக் காணப்படுவதுடன் நிறுவனத்துக்கான களஞ்சிய திருத்தச் செலவு ரூ. 200 000 ---------- ② ஆகக் காணப்படும். மேலே ① ஆம் ② ஆம் இடைவெளிகளில் வரக்கூடிய பொருத்தமான சொற்களை முறையே எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) மூலதனச் செலவு, வருமானச் செலவு
(2) வருமானச் செலவு, மூலதனச் செலவு
(3) செயற்பாட்டுச் செலவு, மூலதனச் செலவு
(4) செயற்பாட்டுச் செலவு, வருமானச் செலவு

34. ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 150 ஆகும். மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 50 ஆகும். மேலும் 2013 ஆம் ஆண்டிற்காக 20 அங்கத்தவர்கள் அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தவில்லை. இவ்விளையாட்டுக் கழகத்திற்காக 2013 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுவனவு கொடுப்பனவுகள் கணக்கில் பதிவுசெய்யப்பட வேண்டிய அங்கத்துவக் கட்டணம்
(1) ரூ. 6 500 ஆகும். (2) ரூ. 7 500 ஆகும். (3) ரூ. 78 000 ஆகும். (4) ரூ. 90 000 ஆகும்.

35. இலாப நோக்கற்ற நிறுவனமொன்றிற்கான வருமானச் செலவு கணக்குத் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பெறப்பட்ட நன்கொடைகள் வருமானச் செலவு கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவுசெய்யப்படும்.
(2) சகல காசுப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் வருமானச் செலவு கணக்கில் பதிவு செய்யப்படும்.
(3) நடப்புக் காலப்பகுதிக்காக காசாகப் பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணம் மாத்திரம் வருமானச் செலவு கணக்கில் பதிவு செய்யப்படும்.
(4) வருமானச் செலவு கணக்கின் மீதியானது மிகை அல்லது பற்றாக்குறை என அழைக்கப்படும்.

[பக். 6 ஐப் பார்க்க

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நந்தன் சில்லறை வணிகத்தினால் தயாரிக்கப்பட்ட 31.12.2013 இல் உள்ளவாறான பரீட்சைமீதி கீழே தரப்படுகின்றது.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| சரக்கிருப்பு (01.01.2013 இல்) | 20 000 | |
| கொள்வனவுகள் | 200 000 | |
| விற்பனைகள் | | 343 000 |
| விநியோக வான் (கிரயத்தில்) | 500 000 | |
| விநியோக வான் - பெறுமானத்தேய்வு ஏற்பாடு (01.01.2013 இல்) | | 100 000 |
| உள்வந்த வண்டிற்கூலி | 9 000 | |
| கொடுத்த கழிவு | 1 200 | |
| வெளிச்சென்ற வண்டிற்கூலி | 14 000 | |
| கட்டட வாடகை | 24 000 | |
| வங்கிக்கடன் 10% | | 100 000 |
| மின்சார செலவுகள் | 12 500 | |
| நிர்வாகச் சம்பளங்கள் | 25 000 | |
| வங்கி மேலதிகப்பற்று | | 12 700 |
| மூலதனம் | | 250 000 |
| | 805 700 | 805 700 |

மேலதிக தகவல்கள்:

1. 31.12.2013 இல் சரக்கிருப்பு ரூ. 30 000 ஆகும்.
2. விநியோக வான்களுக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படுதல் வேண்டும்.

36. 31.12.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இவ்வணிகத்தின் விற்ற சரக்கின் கொள்விலை
(1) ரூ. 179 000 ஆகும். (2) ரூ. 190 000 ஆகும். (3) ரூ. 199 000 ஆகும். (4) ரூ. 229 000 ஆகும்.

37. இவ்வணிகத்தின் நடைமுறைப் பொறுப்பு
(1) வங்கி மேலதிகப்பற்று (2) வங்கிக்கடன்
(3) விநியோக வானின் பெறுமானத்தேய்வு ஏற்பாடு (4) மூலதனம்

38. 31.12.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இவ்வணிகத்தின் இலாப நட்டக் கணக்கில் குறிப்பிடப்படும் நிதி மற்றும் ஏனைய செலவுகளின் மொத்தத் தொகை
(1) ரூ. 1 200 ஆகும். (2) ரூ. 10 000 ஆகும்.
(3) ரூ. 11 200 ஆகும். (4) ரூ. 22 700 ஆகும்.

39. 31.12.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இவ்வணிகத்தின் இலாப நட்டக் கணக்கில் குறிப்பிடப்படும் விநியோக வான் பெறுமானத்தேய்வு
(1) ரூ. 50 000 ஆகும். (2) ரூ. 100 000 ஆகும்.
(3) ரூ. 150 000 ஆகும். (4) ரூ. 550 000 ஆகும்.

40. 31.12.2013 இல் உள்ளவாறான இவ்வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துகளின் பெறுமதி
(1) ரூ. 50 000 ஆகும். (2) ரூ. 350 000 ஆகும்.
(3) ரூ. 400 000 ஆகும். (4) ரூ. 500 000 ஆகும்.

* *

The National e-learning portal for The General Education

[பக். 7 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

60 T I,II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2014

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II
Business and Accounting Studies I, II

## வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**முக்கியம் :** அறிவுறுத்தல்களுக்கமைய **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பத்தில் பரீட்சகரினால் புள்ளிகள் வழங்கப்படாமல் வெட்டிவிடப்படும்.

* **முதலாம்** வினா உட்பட, பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

**1.** பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி **(i)** தொடக்கம் **(x)** வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கொழும்பு பல்கலைக்கழக சுதேச மருத்துவ நிறுவகப் பட்டதாரியான ஹரிதரும் அவருடைய சகோதரியான லதாவும் 01.01.2014 இல் தலா ரூ. 10 000 ஐ மூலதனமாக இட்டு இலைக் கஞ்சி, ஔடத பானங்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் 'ஹரிதர்லதா உள்நாட்டு ஔடதங்கள்' எனும் ஒரு வணிகத்தை வாடகைக் கட்டடமொன்றில் அரச ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்றுக்கு அருகில் தொடங்கினர். அதேதினத்தில் ரூ. 24 000 பெறுமதியான உபகரணங்களைக் கடன் அடிப்படையில் வாங்கியிருந்தனர்.

ஆயுர்வேத வைத்தியசாலையில் வாரத்தின் ஒவ்வொரு நாட்களிலும் வைத்தியர்கள் பிணியாய் (கிளினிக்) நடவடிக்கையின்போது நோயாளிகளுக்கு ஔடத பானங்களின் முக்கியத்துவங்களையும் பயன்களையும் பற்றி அறிவூட்டி வந்தனர்.

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் 2014 ஜனவரி மாதத்தில் நிகழ்ந்தவை ஆகும்.

* காசுக் கொள்வனவு - மூலிகை இலை வகைகள் ரூ. 25 000
* ஏனைய பொருள்களுக்கான கொடுப்பனவு ரூ. 10 000
* செலுத்திய மாதாந்த மின்சாரக் கட்டணம் ரூ. 3 000
* செலுத்திய மாதாந்த கட்டட வாடகை ரூ. 5 000
* உதவியாளருக்குச் செலுத்திய மாதாந்தக் கூலி ரூ. 10 000

மேலும் வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக 31.01.2014 இல் சனச அபிவிருத்தி வங்கியிடமிருந்து வருடாந்தம் 5% வட்டியில் ரூ. 20 000 கடனாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது. உபகரணங்களுக்கான பயனுள்ள ஆயுட்காலம் இரண்டு வருடங்கள் ஆகும்.

31.01.2014 இல் எதுவித சரக்கிருப்பும் காணப்படவில்லை.

(i) மேலுள்ள சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள,
  (அ) தனியார்துறை வணிக நிறுவனம் ஒன்றை எழுதுக.
  (ஆ) பொதுத்துறை வணிக நிறுவனம் ஒன்றை எழுதுக.

(ii) ஹரிதர்லதா உள்நாட்டு ஔடதங்கள் வணிகத்தின் வகையை ஒத்த வணிக நிறுவனம் ஒன்று கொண்டிருக்கக்கூடிய **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் எழுதுக.

(iii) "ஹரிதர்லதா உள்நாட்டு ஔடதங்கள் வணிகம், ஹரிதர் மற்றும் லதாவினால் கொண்டு நடாத்தப்படுவதனால் நிறுவனத்தின் பெயரைப் பதிவுசெய்வது கட்டாயமானதல்ல."
  (அ) இக்கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா ?
  (ஆ) உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(iv) ஹரிதர்லதா உள்நாட்டு ஔடதங்கள் வணிகத்தின் ஒரு பலத்தையும் ஒரு வாய்ப்பையும் குறிப்பிடுக.

(v) இவ்வணிகத்தின் இலைக் கஞ்சி உற்பத்திச் செயன்முறையுடன் தொடர்புடைய உள்ளீடுகள், செயன்முறை, வெளியீடுகள் என்பவற்றை அந்தந்த தலைப்புகளின்கீழ் குறிப்படுக.

(vi) (அ) இவ்வணிகத்தினால் தயாரிக்க வேண்டிய **இரண்டு** மூலப்பதிவு ஏடுகளைக் குறிப்பிடுக.
  (ஆ) 01.01.2014 இல் இருந்தவாறு இவ்வணிகத்தினது மொத்தச் சொத்தின் பெறுமதி எவ்வளவு ?

(vii) 31.01.2014 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிக் கடனைப் பதிவதற்கான இரட்டைப் பதிவை எழுதிக்காட்டுக.

(viii) (அ) 01.01.2014 இல் மூலதனம் எவ்வளவு ?
  (ஆ) 31.01.2014 இல் மொத்தப் பொறுப்புகளின் பெறுமதி எவ்வளவு ?

(ix) 31.01.2014 இல் முடிவடைந்த மாதத்திற்காகத் தயாரிக்கப்படும் இலாப நட்டக் கணக்கில் குறிப்பிடப்படும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு எவ்வளவு ?

(x) 31.01.2014 இல் உள்ளவாறான இவ்வணிகத்தின் காசு மீதி ரூ. 47 000 ஆகும். சகல விற்பனைகளும் காசுக்கு நிகழ்ந்தவையாகும். 2014 ஜனவரி மாதத்திற்கான விற்பனையைக் கணிப்பிடுக. (02 × 10 = 20 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

**பகுதி I - வணிகக்கல்வி**

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**2.** (i) நேர் உற்பத்தி, நேரில் உற்பத்தி ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) (அ) ஒரு மாணவனின் **இரண்டு** தேவைகளை எழுதுக.

(ஆ) நீர் மேலே (அ) இல் குறிப்பிட்ட ஒவ்வொரு தேவையையும் எவ்வாறு நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதை எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) பின்வரும் கூற்றுகள் சரியாயின் **சரி** எனவும் பிழையாயின் **பிழை** எனவும் குறிப்பிடுக.

(அ) உடைமையாளர்கள், முகாமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் போட்டியாளர்கள் ஆகியோர் வணிகமொன்றின் அகச் சூழல் காரணிகள் ஆவர்.

(ஆ) வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக மட்டுமே வணிகத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

(இ) வணிகத்தை ஆரம்பிக்க உத்தேசித்துள்ள ஒரு நபர் முதலில் தயாரிக்க வேண்டியது ஒரு வணிகத் திட்டம் ஆகும்.

(ஈ) வணிகமொன்றின் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் நிகழ்ந்த காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்கள் நிதித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும். (02 புள்ளிகள்)

(iv) (அ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ள ஒரு நபர் எந்த நிறுவகத்தில் இருந்து அதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் ?

(ஆ) வணிகமொன்றைப் பதிவுசெய்வதனால் கிடைக்கும் நன்மைகள் **இரண்டு** தருக. (02 புள்ளிகள்)

(v) குழந்தைகளுக்கான ஆடைகளைத் தைத்து விற்பனை செய்வதற்கான வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு இந்துஜா எதிர்பார்க்கின்றாள். இதற்குப் பயன்படுத்துவதற்காக வாடகை அறை ஒன்றையும் தையல் இயந்திரம் ஒன்றையும் கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றாள். மேலும் உதவியாளர் ஒருவரையும் வேலைக்கமர்த்த எண்ணியுள்ளாள்.

(அ) இவ்வணிகத்தின் நேர்க் கிரயம் ஒன்றை எழுதுக.

(ஆ) இவ்வணிகத்தின் நேரில் கிரயம் ஒன்றை எழுதுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**3.** (i) வங்கி மேலதிகப்பற்று என்பதனால் கருதப்படுவது யாது ? (02 புள்ளிகள்)

(ii) (அ) வணிகமொன்றிற்கான கொடுக்கல்வாங்கலைச் செய்வதற்காக கடன் அட்டை வசதிகளைப் பெற்றுக்கொள்வதனால் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** நன்மைகளைக் குறிப்பிடுக.

(ஆ) காசோலை தொடர்பில் பொதுக் குறுக்குக் கோடிடலுக்கும் சிறப்புக் கோடிடலுக்கும் இடையேயான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) பின்வரும் கூற்றுகள் சரியாயின் **சரி** எனவும் பிழையாயின் **பிழை** எனவும் குறிப்பிடுக.

(அ) வணிகத்தின் ஆதனங்களுக்கான இடர் இழப்பீட்டை வழங்குவது ஆயுளுறுதி ஆகும்.

(ஆ) காப்புறுதியின் நோக்கம் இடரைக் குறைப்பது ஆகும்.

(இ) அடுத்த ஆண்டுக்கான உற்பத்தி இலக்குகள் பற்றித் தெரிவிப்பதற்காக உற்பத்தி முகாமையாளரால் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடிதம் ஒரு வெளிவாரித் தொடர்பாடல் முறை ஆகும்.

(ஈ) காசோலை என்பது காவிக்கு அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்குக் குறித்த தொகைப் பணத்தை வழங்குமாறு நடைமுறைக் கணக்கொன்றின் வாடிக்கையாளரால் அவரது வங்கிக்கு எழுத்து வடிவில் வழங்கப்படும் ஒரு கட்டளை ஆகும். (02 புள்ளிகள்)

(iv) புதிய களஞ்சியசாலைத் திறப்புவிழாவில் பங்குபற்ற அழைப்பதற்காகக் கம்பனியின் சகல ஊழியர்களுக்கும் அதன் முகாமைப் பணிப்பாளரால் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன.

(அ) மேலுள்ள தொடர்பாடல் செயன்முறை தொடர்பாக அனுப்புபவரையும் செய்தி, ஊடகம் ஆகியவற்றையும் பெறுபவரையும் முறையே எழுதுக.

(ஆ) களஞ்சியசாலை ஒன்று காணப்படுவதனால் வணிகமொன்றுக்குக் கிடைக்கும் **இரண்டு** அனுகூலங்களைத் தருக. (02 புள்ளிகள்)

(v) சுகந்தன் என்பவர் பண்டாரவளையில் இருந்து பெருந் தொகையாக புத்தம்புது மலர்களைக் கொள்வனவு செய்து கொழும்பில் மலர்களை விற்பனை செய்யும் நிலையங்களுக்கு அவற்றை விநியோகம் செய்யும் வணிகமொன்றை நடத்துகின்றார்.

(அ) மேற்குறித்த வணிகத்திற்காக சுகந்தனால் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான போக்குவரத்துப் பாதையையும் ஊடகத்தையும் ஒழுங்குமுறையில் எழுதுக.

(ஆ) நீர் (அ) இல் குறிப்பிட்ட பாதை, ஊடகம் என்பவற்றைத் தெரிவுசெய்வதில் கருத்திற் கொண்ட **இரண்டு** காரணிகளைத் தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**4.** (i) காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் முதலீட்டாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளும் **இரண்டு** நன்மைகளைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) (அ) சாதாரண பங்குகளுக்கும் முன்னுரிமைப் பங்குகளுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை ஒன்றையும் வேற்றுமை ஒன்றையும் குறிப்பிடுக.

(ஆ) வணிகம் ஒன்றிற்கான நிதியிடும் வழிமுறையைத் தெரிவுசெய்யும்போது கருத்திற் கொள்ள வேண்டிய **இரண்டு** காரணிகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) பின்வரும் கூற்றுகள் சரியாயின் **சரி** எனவும் பிழையாயின் **பிழை** எனவும் குறிப்பிடுக.

(அ) வரையறுத்த கம்பனி ஒன்றிற்கான நிதியிடல் முறை பங்குவழங்கல் மட்டுமே ஆகும்.

(ஆ) பெறப்படுகின்ற வட்டி வருமானம், பங்குகளில் முதலீடு செய்வதனால் கிடைக்கின்ற ஒரு திரும்பல் ஆகும்.

(இ) நிலையான வைப்புகளிலும் பார்க்க சாதாரண பங்குகளில் ஓர் உயர்வான திரும்பலைப் பெற்றுக்கொள்ள முடியும். காரணம் நிலையான வைப்புகளிலும் பார்க்க சாதாரண பங்குகளில் உயர்வான இடர் காணப்படுதலாகும்.

(ஈ) முதலீடுகள் அவற்றின் சட்டரீதியான வடிவத்தைக் கருத்திற் கொண்டு முறை சார்ந்தது, முறை சாராதது என வகைப்படுத்தப்படுகிறது. (02 புள்ளிகள்)

[பக். 9 ஐப் பார்க்க

(iv) சம்பந்தன் என்பவர் பன்னிரண்டு மாதங்களின் பின்னர் செலுத்த வேண்டிய ஒரு கற்கை நெறிக் கட்டணமான ரூ. 100 000 ஐ தனது உறவினர் ஒருவரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். பாடநெறிக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய காலப்பகுதி வரை அதனை ஓர் உயர்வான திரும்பலைத் தரக்கூடிய முதலீட்டில் ஈடுபடுத்த விரும்பினார். இது தொடர்பில் அவரது நண்பர் ஒருவர் அதனை ஒரு சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யுமாறு அவருக்கு அறிவுரை வழங்கினார்.

(அ) இப்பணத்தை சேமிப்புக் கணக்கில் முதலீடு செய்வது சம்பந்தனுக்கு மிகவும் பொருத்தமான முதலீட்டு முறை என நீர் கருதுகின்றீரா ?

(ஆ) மேலே (அ) இல் உமது விடைக்கான காரணங்களைத் தருக. (02 புள்ளிகள்)

(v) கமலன் என்பவரால் நடாத்தப்பட்ட 'லக்ஷீபன் அரிமரக் கடையை', 'பெரியண்ணனும் சகோதரர்களும் தளபாட வியாபாரிகள்' கொள்வனவு செய்யத் தீர்மானித்தனர்.

(அ) 'பெரியண்ணனும் சகோதரர்களும் தளபாட வியாபாரிகள்', 'லக்ஷீபன் அரிமரக் கடை' ஆகியன எவ்வகையான வணிக நிறுவன அமைப்புக்குரியன ?

(ஆ) 'பெரியண்ணனும் சகோதரர்களும் தளபாட வியாபாரிகள்' இம்முதலீட்டிற்காகப் பயன்படுத்தக்கூடிய நிதியீட்டல் முறை ஒன்றினைத் தருக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## பகுதி II - கணக்கீடு

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

5. (i) வணிகம் ஒன்றின் சில கொடுக்கல்வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கம் ஏற்படுத்திய விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | சொத்துகள் | = | உடைமையாளர் உரிமையாண்மை | + பொறுப்புகள் |
|---|---|---|---|---|
| (அ) | காசு<br>+ 50 000 | = | மூலதனம்<br>+ 50 000 | – |
| (ஆ) | காசு<br>– 20 000<br>சரக்கிருப்பு<br>+ 20 000 | = | – | – |
| (இ) | காசு<br>– 5 000 | = | மின் கட்டணங்கள்<br>– 5 000 | – |
| (ஈ) | சரக்குகள்<br>+ 10 000 | = | – | கடன்கொடுத்தோர்<br>+ 10 000 |
| (உ) | காசு<br>– 5 000 | = | – | கடன்கொடுத்தோர்<br>– 5 000 |

**வேண்டப்படுவது,**

மேலுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிகழ்ந்த கொடுக்கல்வாங்கலைத் தொகைகளுடன் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) திரு. சிந்துஜன் என்பவர் வியாபார நிறுவனமொன்றை 01.01.2014 இல் தொடங்கியிருந்தார். 31.01.2014 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி பின்வருமாறு:

| | | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|---|
| | கொள்வனவுகள் | 55 000 | |
| A - | விற்பனைகள் | | 70 000 |
| | தளபாடம், உபகரணங்கள் | 42 000 | |
| B - | பற்றுகள் | 7 000 | |
| | சம்பளமும் கூலியும் | 8 000 | |
| | வங்கிக்கடன் | | 25 000 |
| | கட்டட வாடகை | 6 000 | |
| | உள்வந்த வண்டிற்கூலி | 10 000 | |
| C - | வங்கிக்கடன் வட்டி | 2 500 | |
| D - | காசு மீதி | 63 400 | |
| | மூலதனம் | | 100 000 |
| | தொங்கற் கணக்கு | 1 100 | |
| | | 195 000 | 195 000 |

மேலே தரப்பட்ட பரீட்சைமீதியைத் தயாரித்த பின்னர் பின்வரும் கணக்கீட்டுத் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

* தளபாட, உபகரண திருத்தச் செலவுகள் ரூ. 2 000 தளபாடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.
* செலுத்தப்பட்ட மாதாந்த தொலைபேசிக் கட்டணம் ரூ. 1 100 காசேட்டில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது,**

(அ) மேலுள்ள பரீட்சை மீதியில் **A, B, C, D** என்னும் எழுத்துகளால் குறிப்பிடப்பட்டுள்ளவை ஒவ்வொன்றும் உரித்தாகும் கணக்கு வகை

(ஆ) மேலுள்ள தவறுகளை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

(இ) தொங்கற் கணக்கு (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

[பக். 10 ஐப் பார்க்க

The National e-learning Portal for The General Education

6. (i) (அ) வங்கிக்கூற்றின் வரவு நிரலில் காணப்படும் **இரண்டு** உருப்படிகளை எழுதுக.
(ஆ) வங்கிக்கூற்றின் செலவு நிரலில் காணப்படும் **இரண்டு** உருப்படிகளை எழுதுக.
(இ) காசேட்டின் வங்கி நிரலின் வரவுப் பக்கத்தில் காணப்படும் **இரண்டு** உருப்படிகளை எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வருவன ரூபன் என்பவரால் 01.01.2014 இல் ஆரம்பிக்கப்பட்ட வியாபார நிறுவனமொன்றின் ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் நிகழ்ந்த கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.

* ஜனவரி 1 : ரூ. 50 000 ஐ முதலிடுவதன் மூலம் வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது.
* ஜனவரி 3 : கறுப்பன் என்பவரிடம் இருந்து கடனுக்கு ரூ. 30 000 பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
* ஜனவரி 4 : காசாகச் செலுத்திய வாடகை ரூ. 5 000 ஆகும்.
* ஜனவரி 5 : காசு மூலமான விற்பனைகள் ரூ. 15 000 ஆகும்.
* ஜனவரி 6 : தருமன் என்பவருக்குச் செய்த கடன் விற்பனைகள் ரூ. 12 000 ஆகும்.
* ஜனவரி 7 : காசாகச் செலுத்திய நானாவிதச் செலவுகள் ரூ. ,6 000 ஆகும்.

**வேண்டப்படுவது,**

மேலுள்ள கொடுக்கல்வாங்கல்களை வியாபார நிறுவனத்தின் காசேட்டில் பதிவதுடன் 07.01.2014 இல் காசு மீதியைக் காட்டுக. (03 புள்ளிகள்)

(iii) சிராஜ் வாசகர் சங்கத்தின் அங்கத்தவர் எண்ணிக்கை 220 ஆகும். ஓர் அங்கத்தவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 100 ஆகும். 31.12.2013 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பின்வரும் தகவல்கள் சங்கத்தின் பொருளாளரால் வழங்கப்பட்டுள்ளது.

| | ரூ. |
|---|---|
| பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணம் | 20 000 |
| மின்சாரக் கட்டணங்கள் | 3 600 |
| பழைய பத்திரிகைகள் விற்பனையால் பெற்ற காசு | 2 000 |
| நீர்க் கட்டணங்கள் | 1 200 |
| சம்பளங்கள் | 10 000 |
| வாசிப்போர் மீது விதிக்கப்பட்ட தண்டப் பணம் | 500 |
| பத்திரிகைகள் கொள்வனவு | 6 000 |
| பெற்ற நன்கொடைகள் | 10 000 |
| தளபாட உபகரணங்கள் கொள்வனவு | 8 000 |

**வேண்டப்படுவது,**

சிராஜ் வாசகர் சங்கத்தின் 31.12.2013 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச் செலவுகள் கணக்கு (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

7. பாலன் வியாபார நிறுவனத்தின் 31.12.2013 இல் இருந்தவாறான பரீட்சைமீதி கீழே தரப்பட்டுள்ளது.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| மூலதனம் | | 400 000 |
| சரக்கிருப்பு (01.01.2013 இல்) | 25 000 | |
| காணி கட்டடங்கள் (கிரயத்தில்) | 300 000 | |
| பொறி இயந்திரங்கள் (கிரயத்தில்) | 100 000 | |
| கடன்பட்டோர் | 42 000 | |
| கடன்கொடுத்தோர் | | 35 000 |
| கொள்வனவுகள் | 250 000 | |
| விற்பனைகள் | | 350 000 |
| மின்சாரக் கட்டணங்கள் | 18 500 | |
| காப்புறுதிக் கட்டணங்கள் | 8 000 | |
| சம்பளங்கள் | 30 000 | |
| பற்றுகள் | 5 000 | |
| விளம்பரப்படுத்தல் செலவுகள் | 5 000 | |
| விநியோகச் செலவுகள் | 14 500 | |
| வங்கிக் கடன் 10% | | 50 000 |
| வங்கிக் கட்டணங்கள் | 2 000 | |
| வங்கிக் கடன் வட்டி | 2 500 | |
| காசு மீதி | 32 500 | |
| | 835 000 | 835 000 |

மேலதிக தகவல்கள் :

* 31.12.2013 இல் சரக்கிருப்புகள் கிரயத்தில் ரூ. 28 000 ஆகும்.
* பொறி இயந்திரங்களுக்கு வருடாந்தம் நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படுதல் வேண்டும்.
* ரூ. 2 000 பெறுமதியான கடன்பட்டோர் தொகை அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப்படுதல் வேண்டும்.

**வேண்டப்படுவது:**

(i) 31.12.2013 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பாலன் வியாபார நிறுவனத்தின் வியாபார இலாப நட்டக் கணக்கு (05 புள்ளிகள்)

(ii) 31.12.2013 இல் உள்ளவாறான ஐந்தொகை (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

***